# 19 கற்றல் தொடர்பான கலந்துரையாடல்களை நடத்துதல்

இலக்கு

*ஆழமான பேச்சுத் தொடர்புடைய உரையாடல் வடிவங்களுள் ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையே நடைபெறும் கல்விப் பேச்சுகள் அமைகின்றன. இங்குதான் மாணவர்கள் வேண்டுகையும் எதிர்வினையுமுள்ள சூழ்நிலையில் தம்முடைய தாய் மொழியினை எவ்வாறு பயன்படுத்தலாம் என்னும் பட்டறிவினையும் பெறுகின்றனர். அவர்கள் தங்களைத் தாங்களே மதிப்பிடலையும், தங்கள் கற்றலுக்கு எதிர்வினை ஆற்றலையும், தங்கள் முன்னேற்றத்தையும் தாம் எங்கு இன்னும் செம்மைப்படுத்தலாம் என்பதையும் கற்றுக்கொள்கின்றனர்.*

தரம் 1 - 9

5 - 25 மணித்துளிகள்

**குறிப்புகள்:**

- பா.மொ.க வின் கற்றல் தொடர்பான கலந்துரையாடலின் கட்டமைப்பு பெரும்பாலும் இரண்டு சூழ்நிலைகளைக் கொண்டமையும்:

  1. முதன்மையாக ஒரு சிறப்புப் பணி பற்றிய சுருக்கமான பின்னூட்டல் பற்றிய சிறிய கல்விப் பேச்சுகள். இத்தகையது வகுப்பிலும் நடக்கலாம், வகுப்பில் மாணவர்களின் அமைதியான ஒப்படை வேலைக்கு இணையொத்தது.

  2. பெரும்பாலும் அடிப்படையான நிலை மதிப்பீட்டை உட்படுத்தும் விரிவான கற்றல் தொடர்பான கலந்துரையாடல்கள். அவற்றுக்கு கூடிய நேரம் வேண்டப்படலாம்.

- அதனால் அவற்றை வகுப்புக்கு முன் அல்லது பின் நடத்தலாம். குறைந்தது ஒவ்வொரு அரையாண்டிலும் ஒவ்வொரு மாணவருடனும் கற்றல் தொடர்பான கலந்துரையாடல்கள் நடத்தப்படவேண்டும். நடைமுறையில், இது பெரும்பாலும் தர அறிக்கையுடன் இணைந்து இடம்பெறும். குறிப்பிட்ட ஒப்படை (எடுத்துரைப்பு, முதலியன) பற்றிய கல்விப் பேச்சுகளும் அவைபோல மதிப்புடையன.
- கலந்துரையாடலின் போது மாணவர்களும் தங்களை அணியப்படுத்திக்கொள்வது பயனுடையதாகும். இந்த முறையில், மாணவர்கள் துல்லியமான வினாக்களையும் செயற்பாடுகளையும் பெறவேண்டும்.
- விதிவிலக்கான வேளைகளில், ஒரே நேரத்தில் இரண்டு மாணவர்களுடன் கற்றல் தொடர்பான பேச்சுகளை நடத்தலாம்.
- நல்ல தகவல்கள், மதியுரைகள், எடுத்துக்காட்டுகள் (ஜேர்மனில்) ‹Schulentwicklung nrw-Lerngespräche führen› என்ற தலைப்பினுள் இணையத்தளத்தில் உள்ளன.

---

**நடைமுறை (எடுத்துக்காட்டு):**

- தொடக்கப் புள்ளியாக மாணவர்களுடன் ஒரு கற்றல் தொடர்பான உரையாடலுக்கு ஆசிரியரின் வேண்டுதல் அமையலாம். அது ஒரு குறிப்பிட்ட பணி அல்லது பொதுவாக அவர்களுடைய முன்னேற்றம் மற்றும் மேம்பாட்டுத் தேவைகள் பற்றியதாகும். அது தன் ஆசிரியருடன் ஒரு பணி, சிக்கல் அல்லது முன்னேற்றம் பற்றி கலந்துரையாட ஒரு பிள்ளையின் வேண்டுகோளின் விளைவாகவும் அமையலாம்.
- அடிப்படைக் கலந்துரையாடல்களுக்கு முன்னர், உரையாடலில் பங்கேற்பவர்கள் ஏற்பாடு செய்தற்கு வேண்டிய நேரம் கொடுப்பதற்கு பொருத்தமானதும் தக்கதுமான ஒரு நேரச் சட்டகத்தினை உறுதிப்படுத்தவேண்டும்.
- ஒரு சுருக்கத் தொகுப்புடன் கற்றல் தொடர்பான கலந்துரையாடல் நிறைவடையும். நடக்கக்கூடியவை: உடன்பாடுகள் வரைதற்கும், அல்லது அடுத்த கிழமைகள் அல்லது 3-4 மாதங்களுக்குள் துல்லியமான இலக்குகளை இணக்கம் கண்டு பதிவுசெய்யப்படவும் ஒரு சிறிய நெறிமுறை.

---

**ஒரு குறிப்பிட்ட பணிபற்றிய கற்றல் தொடர்பான கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யவேண்டிய வினாக்களுக்கான எடுத்துக்காட்டுகள்**

▶ தயவுசெய்து அறிக்கையிடுக: இந்த ஒப்படையில் எப் பண்புகளில் நன்றாக வெற்றியடைந்துள்ளேன்?

▶ எனக்கு எது கடினமாயிருந்தது?

▶ எங்கு நான் முன்னேறவேண்டும்?

▶ அடுத்த முறை வேறுபட்டதாக நான் என்ன செய்வேன்? என்ன செய்யவேண்டும்?